RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 32 | பிப்ரவரி.8 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# India-US deal | “விவசாயிகளுக்கு பாதிப்பு ஏதுமில்லை” நிர்மலா சீதாராமன், பியூஷ் கோயல் உறுதி

புதுடெல்லி: பிப்.8-

இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம், இந்திய ஏற்றுமதிகளுக்கு மிகப் பெரிய வாய்ப்பை உருவாக்கி இருக்கும் அதேநேரத்தில், நாட்டின் விவசாயம் மற்றும் பால் பொருட்கள் துறை முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கூட்டறிக்கை வெளியிடப்பட்டதை அடுத்து நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ‘‘இந்திய அமெரிக்க கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இரு தரப்புக்கும் நன்மை பயக்கும் வர்த்தகம் தொடர்பான ஒரு இடைக்கால ஒப்பந்தத்துக்கான கட்டமைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் பரந்த அளவில் இருப்பதை பேச்சுவார்த்தை மூலம் இறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்’’ என தெரிவித்துள்ளார்.

நிர்மலா சீதாராமன் அலுவலகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவுகளில், ‘‘இந்திய அமெரிக்க இடைக்கால ஒப்பந்த கட்டமைப்பு, இந்தியாவின் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் ஒருங்கிணைக்க ஆதரவு அளிக்கும்.

மேலும், வணிகங்கள் மற்றும் நுகர்வோருக்கான செலவுகளைக் குறைக்கும். இந்த இடைக்கால ஒப்பந்தம், டிஜிட்டல் சேவைகள் துறையில் இந்தியாவின் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும். கூட்டு தொழில்நுட்ப ஒத்துழைப்பு, இந்தியாவை செயற்கை நுண்ணறிவு, தரவு, டிஜிட்டல் சேவைகளுக்கான ஒரு மையமாக நிலைநிறுத்தும்.



இந்தியா தனது விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளின் நலன்களைப் பாதுகாத்துள்ளது. முக்கிய விவசாயப் பொருட்கள் மற்றும் பால் பண்ணைப் பொருட்கள், மசாலாப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றின் உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாத்து, விவசாயிகளின் வருமானத்தை வலுப்படுத்துகிறது’’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பியூஷ் கோயல் சொல்வது என்ன?

இந்த ஒப்பந்தம் மூலம் அமெரிக்காவுக்கான இந்திய ஏற்றுமதி அதிரிக்கும் என்றும், இதன் காரணமாக லட்சக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘‘பிரதமர் நரேந்திர மோடியின் தீர்க்கமான தலைமையின் கீழ் இந்தியா, அமெரிக்காவுடன் ஓர் இடைக்கால ஒப்பந்தத்துக்கான கட்டமைப்பை எட்டியுள்ளது. இது இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு, குறிப்பாக சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள், விவசாயிகள், மீனர்கள் உள்ளிட்டோருக்கு 30 டிரில்லியன் டாலர் சந்தையை திறக்கும். இதனால் ஏற்றுமதி அதிரிக்கும். நமது பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் லட்சக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியா, இந்தியப் பொருட்களுக்கான பரஸ்பர வரியை அமெரிக்கா 18% ஆகக் குறைக்கும். இது அமெரிக்கா எனும் உலகின் மிகப் பெரிய பொருளாதாரத்தில், ஜவுளி மற்றும் ஆடை, தோல் மற்றும் காலணிகள், பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட இயந்திரங்ககள் ஆகியவற்றுக்கான ஏற்றுமதி சந்தை வாய்ப்பை வழங்கும்.

கூடுதலாக, பொதுவாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள், ரத்தினங்கள், வைரங்கள், விமான பாகங்கள் உட்பட பரந்த அளவிலான பொருட்களுக்கான வரிகள் பூஜ்ஜியமாகக் குறைக்கப்படும். இதன்மூலம், இந்தியாவின் ஏற்றுமதி போட்டித்திறன் மேம்படுத்தப்படும். இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் வலுப்பெறும்.

இந்த ஒப்பந்தம், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் ஆழப்படுத்துவதில் கவனம் செலுத்த உதவும். இது நமது மக்களுக்கும் வணிகங்களுக்கும் நிலையான வளர்ச்சியை அளிப்பதற்கான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது’’ என தெரிவித்துள்ளார்.

# தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் பிப்.17 தாக்கல்: சபாநாயகர் அறிவிப்பு

சென்னை, பிப்.8-

தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் பிப்.17ம் தேதி தாக்கல் செய்யப்படும் என சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்.தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. எனவே, தமிழக அரசு 202627 நிதி ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டி உள்ளது. இந்நிலையில், தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் கடந்த 5ம் தேதி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் ரூ.34,327 கோடி மதிப்பிலான 15 தொழில் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.



இது தொடர்பாக திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் சபாநாயகர் அப்பாவு கூறியதாவது: தமிழக சட்டப்பேரவை விதி எண் 26/1ன் கீழ் தமிழக அரசின் சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் 17ம் தேதி காலை 9:30 மணிக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் கூடுகிறது. அன்றைய தினம் 2026 27 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.

தொடர்ந்து வரும் 20ம் தேதி பேரவை விதி 193/1ன் கீழ் 2026 27 ஆம் ஆண்டுக்கான முன்பண மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

இதே போல் பேரவை விதி 189 /1ன் கீழ் 2025 26 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவின மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.


வரும் 17ம் தேதி அலுவல் ஆய்வுக் குழு கூடி சட்டப்பேரவை எத்தனை நாள்கள் நடைபெறும் என்பதை முடிவு செய்யும். சட்டப்பேரவை நிகழ்வுகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. உலகெங்கிலும் இருந்து யார் வேண்டுமானாலும் இணையதளம் மூலம் அதை பார்த்துக் கொள்ள முடியும். அமைச்சரின் பதிலுரைகள், மானிய கோரிக்கைகள், சிறப்பு தீர்மானங்கள் போன்றவை நேரலை செய்யப்படுகிறது. சட்டப்பேரவை விவாதங்களை முழுமையாக நேரலை செய்வது குறித்து சட்டப்பேரவை அலுவல் ஆய்வு குழு முடிவு செய்யும். இவ்வாறு அப்பாவு கூறினார்.

# “ஏஜ தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்துங்கள்” மாணவர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை

புதுடெல்லி, பிப்.8-

மாணவர்கள் வாழ்க்கையில் சமநிலையை பேணவும், அனைத்து வகை வளர்ச்சியிலும் கவனம் செலுத்தவும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்தவும் பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தினார்.

பொதுத் தேர்வுகளை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்வது குறித்து ‘பரிக் ஷா பே சர்ச்சா' (HHC) என்ற தலைப்பில் மாணவர்களுடன் ஆண்டுதோறும் பிரதமர் மோடி கலந்துரையாடி வருகிறார். அந்த வகையில் குஜராத்தில் உள்ள தேவமோக்ரா, தமிழகத்தில் கோவை, சத்தீஸ்கரில் ராய்ப்பூர், அசாமில் குவாஹாட்டி மற்றும் டெல்லியில் வசிக்கும் மாணவர்களுடன் பிரதமர் மோடி நேற்று தனது இல்லத்தில் கலந்துரையாடினார்.



அப்போது பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: கல்வியை ஒரு சுமையாகக் கருதக்கூடாது. தேர்வுகள் ஒரு போதும் இறுதி இலக்காக இருக்கக்கூடாது. கல்வி என்பது நமது வளர்ச்சிக்கான ஒரு ஊடகம் மட்டுமே... மதிப்பெண்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொருவரும் வாழ்க்கையில் என்ன சாதிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து முரண்பட்ட ஆலோசனைகள் வரலாம். கல்வி கற்பதில் ஒவ்வொரு மாணவருக்கும் தனித்துவமான பாணி உள்ளது. அந்த வழக்கத்தையே பின்பற்றுங்கள். அனுபவங்கள் மூலம் உங்களை படிப்படியாக மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

படிப்பு, தூக்கம், உணவு, பொழுதுபோக்கு ஆகியவற்றுக்கு இடையே சமநிலையை பேண வேண்டும். நீங்கள் ஒரு பக்கம் அதிகமாக சாய்ந்தால், நீங்கள் நிச்சயமாக வீழ்ச்சியடைவீர்கள். வாழ்க்கையில் எல்லாவற்றுக்கும் சமநிலை தேவை.

அனைத்து வகை வளர்ச்சியிலும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டுத் திறன் உங்கள் ஆளுமை வளர்ச்சிக்கு உதவிபுரியும். அதேவேளையில் சூதாட்டம் தொடர்பாக நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பொதுத்தேர்வுகளுக்கு நீங்கள் முன்னுரிமை அளித்தால் அது போட்டித் தேர்வுகளுக்கு வலுவான அடித்தளத்தை ஏற்படுத்தும். உங்கள் பாடங்களை நீங்கள் முழுவதும் புரிந்து கொண்டால் போட்டித் தேர்வுகளுக்கு தனி முயற்சி தேவையில்லை.

தேர்வு முறைகளுக்கு மட்டும் தயாராவதை விட முழுமையான கற்றலுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். சகாக்களுக்கு கற்பித்தல் மூலமும், புத்திசாலித்தனமான வகுப்பு தோழர்களிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறுவதன் மூலமும் மாணவர்கள் ஒத்துழைப்புடன் கல்வி கற்க வேண்டும்.

தொழில்நுட்பத்தை பொழுதுபோக்குக்கான ஒரு கருவியாக கருதாமல், உண்மையான கற்றலுக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும். செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

பிபிசி 2026 நிகழ்ச்சிக்கு 2025, டிசம்பர் 1 முதல் 2026 ஜனவரி 11 MyGovIndia இணையதளத்தில் 4.5 கோடிக்கும் அதிகமானோர் பதிவு செய்தனர். மேலும், ஜனவரி 12 முதல் ஜனவரி 23 வரை 2.26 கோடிக்கும் அதிகமானோர் பள்ளி அளவிலான பல்வேறு செயல்பாடுகளில் பங்கேற்றனர். இதன் மூலம் இந்த ஆண்டு மொத்த மாணவர் பங்கேற்பு 6.76 கோடியாக உயர்ந்தது.

# தமிழகத்தில் ஒரே மாதத்தில் 1,500 பேருக்கு டெங்கு

சென்னை, பிப்.8-

தமிழகத்தில் ஒரே மாதத்தில் 1,500 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 1,500 பேர் வரை டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு பரவலை தடுக்க மாநில முழுவதும் கொசு ஒழிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



இதுதொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறும்போது, “தமிழகத்தில் கடந்த ஆண்டு 25,521 பேர் டெங்கு காய்ச்லால் பாதிக்கப்பட்டனர். 12 பேர் உயிரிழந்தனர். தற்போது அதிகரித்துள்ள பாதிப்பு 2 மாதத்தில் குறையும்.

டெங்கு மட்டுமின்றி மலேரியா, சிக்குன் குனியா பாதிப்பு ஏற்பட்டால், அலட்சியமாக இல்லாமல் உடனே சிக்சிசைபெற வேண்டும். கொசு ஒழிப்புபணிகள் தீவிரமாக நடக்கிறது. பொதுமக்களும் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்” என்றனர்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# “நான் மன்னிப்பு கேட்க மாட்டேன்” : ஒபாமா தம்பதி மீதான இனவெறி சாடல் குறித்து ட்ரம்ப்

நியூயார்க், பிப்.8-

அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, அவரது மனைவி பற்றிய இனவெறி ரீதியிலான சர்ச்சை வீடியோவுக்கு மன்னிப்பு கோரப் போவதில்லை என்று தற்போதைய அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முதல் கருப்பின அதிபராக பராக் ஒபாமா அறியப்படுகிறார். இந்நிலையில், அவரையும், அவரது மனைவியையும் இனவெறி ரீதியாக விமர்சிக்கும் வகையிலான பதிவு ஒன்று அமெரிக்காவின் தற்போதைய அதிபர் ட்ரம்ப்பின் ‘ட்ரூத் சோஷியல்’ சமூக வலைதளத்தில் வெளியானது.



இந்த பதிவு வெளியான நொடி முதலே அந்நாட்டு மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் கண்டனத்தை பெற்றது. இதில் குடியரசு மற்றும் ஜனநாயக கட்சியினரும் அடங்குவர்.

இந்தச் சூழலில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் கூறியதாவது: “நான் அந்த வீடியோவை முழுமையாக பார்க்கவில்லை. நான் அதன் முதல் பகுதியை மட்டுமே பார்த்தேன். அது தேர்தலில் இயந்திரங்கள் மூலம் நடந்த வாக்கு மோசடி தொடர்பானது. அதன் பின்னர் அதை மக்கள் பார்வைக்கு பகிர்ந்தேன். பொதுவாக இது மாதிரியான வீடியோக்களை முழுவதுமாக பார்ப்பார்கள். ஆனால், இதில் சிலர் அப்படி செய்யவில்லை என கருதுகிறேன். இந்த விவகாரத்தில் நான் தவறு செய்யவில்லை. அதனால் நான் மன்னிப்பு கேட்க மாட்டேன்” என்றார்.

இந்திய நேரப்படி வெள்ளிக்கிழமை இரவு ட்ரம்ப்பின் ட்ரூத் சோஷியல் பக்கத்தில் இந்த வீடியோ பகிரப்பட்டது. அதில் முன்னாள் அதிபர் ஒபாமா மற்றும் அவரின் மனைவி மிச்செல் ஒபாமாவின் முகத்தை காட்டுக்குள் உள்ள குரங்கு கூட்டத்தில் உள்ள குரங்கின் முகத்துக்கு வைத்து 2020 தேர்தல் உடன் ஒப்பிடப்பட்டு இருந்தது.

இதற்கு கடும் எதிர்ப்புகள் எழுந்த நிலையில், வீடியோ பகிரப்பட்ட 12 மணி நேரத்தில் அது நீக்கப்பட்டது. முன்னதாக, இந்த வீடியோவை வெள்ளை மாளிகை பணியாளர் தவறாக பகிர்ந்ததாக தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பண்டிகைக்கால சலுகைகள்: தங்க பரிமாற்றத் திட்டத்தை நீட்டிக்கும் தனிஷ்க்




மதுரை, பிப் 8-

இந்தியா முழுவதும் மக்களின் நம்பிக்கையை பெற்ற டாடா குழுமத்தின் நகை பிராண்டான தனிஷ்க், தனது நாடு தழுவிய 'தங்க பரிமாற்றத் திட்டத்தை' நீட்டிப்பதுடன், பண்டிகைக்காலத்தை முன்னிட்டு இரண்டு புதிய சலுகைகளை அறிமுகம் செய்துள்ளது. பழைய தங்கத்தை எந்தக் கழிவும் இல்லாமல் (0% deduction) மாற்றிக்கொள்ளும் வசதியுடன், முன்கூட்டியே தங்கம் வாங்குவோருக்கு சிறந்த தங்க விலை (Best Gold Rate – BGR) மற்றும் தங்கத்தை மாற்றி வைர நகைகளை பெறும் திட்டங்கள் அறிமுகமாகியுள்ளன.

முன்கூட்டிய கொள்முதல் திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர்கள் தங்க நகைகளை முன்பதிவு செய்து விலையை உறுதி செய்யலாம். பில் போடும் போது முன்பதிவு செய்த விலை அல்லது அன்றைய சந்தை விலை – இதில் குறைவான விலையே வசூலிக்கப்படும். இந்த சலுகை ஜனவரி 24 முதல் பிப்ரவரி 25 வரை செய்யப்பட்ட முன்பதிவுகளுக்கு மட்டுமே பொருந்தும். மேலும், தனிஷ்க் ஸ்டோர்களில் மியா தயாரிப்புகளுக்கும் இந்தச் சலுகை நடைமுறையில் இருக்கும்.

பழைய தங்கத்தை நவீன வைர நகைகளாக மாற்றிக்கொள்ளும் வசதி மூலம், குடும்பங்கள் தங்களின் பாரம்பரிய நகைகளை புதுப்பிக்க முடியும். இதன் மூலம் தங்க மறுசுழற்சி அதிகரிப்பதுடன், தங்க இறக்குமதியை குறைக்கவும் உதவும் என தனிஷ்க் தெரிவித்துள்ளது. சச்சின் டெண்டுல்கர் உள்ளிட்டோர் இந்த திட்டங்களை பாராட்டியுள்ளனர்.

## சட்டவிரோதமாக நாட்டு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை வைத்திருப்பவர்கள் பிப்ரவரி 15ஆம் தேதிக்குள் ஒப்படைக்க வேண்டும்




தேனி பிப்.08

தேனி மாவட்டம் மேகமலை பகுதிகளில் வனவிலங்கு வேட்டைகளை தடுக்கும் நோக்கில், சட்டவிரோதமாக நாட்டு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை வைத்திருப்பவர்கள் பிப்ரவரி 15ஆம் தேதிக்குள் தாமாக முன்வந்து அருகிலுள்ள காவல் நிலையங்கள் அல்லது வனத்துறை அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டும் என வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நாட்டு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை ஒப்படைக்கும் நபர்களுக்கு எதிராக எந்தவித வழக்குப்பதிவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என வனத்துறை தெரிவித்துள்ளது. ஆனால், அறிவிக்கப்பட்ட காலக்கெடு முடிந்த பிறகும் நாட்டு துப்பாக்கிகளை ஒப்படைக்காமல் வைத்திருப்போர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேகமலை உள்ளிட்ட வனப்பகுதிகளில் வனவிலங்குகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், பொதுமக்கள் முழு மையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் வனத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

## தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி, தெற்கு பகுதி மற்றும் தாம்பரம் மேற்கு பகுதி சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது



தாம்பரம் பிப் 08-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி, தெற்கு பகுதி மற்றும் தாம்பரம் மேற்கு பகுதி சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் தாம்பரம் வட்டார நாடார்கள் சங்க திருமண மண்டபம் முடிச்சூர் ரோடு மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள 4வது மண்டல குழு தலைவரும் வடக்கு பகுதி கழக செயலாளருமான டி.காமராஜ், 5வது மண்டல குழு தலைவரும் மேற்கு பகுதி செயலாளருமான எஸ்.இந்திரன் ஆகியோர் தலைமையில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.சேகர் வரவேற்பில் இக்கூட்டம் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக காஞ்சி மாவட்ட கழக செயலாளரும் சிறு குரு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா, தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பருதி இளம்சுருதி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு 11/2/2026 அன்று நடைபெற உள்ள மண்டல மாநாட்டிற்கு 49 தொகுதியில் இருந்து 1.75 பேர் கலந்து கொள்ள உள்ளன கூட்டத்திற்கு மூணு மணிக்குள் வரவேண்டும் எனவும் தலைவர் பேசியது பிடித்த பின்னர் கூட்டம் களைய வேண்டும் எனவும் திமுக கட்சியில் நடிகர் கட்சி இருந்தவர்கள் எல்லாம் திமுகவில் சேர்ந்து வருகின்றனர் எனவே வட்ட கழக செயலாளர் பொறுப்புடன் பணி செய்து வருகின்ற தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என ஆலோசனைகளை அறிவுரைகளை வழங்கி 7வது முறையாக திமுக ஆட்சி வெற்றி பெற வேண்டும் என தெரிவித்தனர் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர, பகுதி வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், ஙிலிகி2, ஙிலிசி, ஙிஞிகி, ஙிசீளி, பாக இளைஞர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## வேங்கைவாசல் ஊராட்சியில் (பதுவஞ்சேரி) 15 வது நிதிக்குழு மானியம் 2022 -23 ஆம் ஆண்டு 1.28.35.000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா



வேங்கைவாசல் பிப் 08-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், வேங்கை வாசல் முதல் நிலை ஊராட்சியில் ( 06.02.26 ) வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில் (பதுவஞ்சேரி) 15 வது நிதிக்குழு மானியம் 2022 23 ஆம் ஆண்டு 1.28.35.000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை தமிழக முதல்வர், மு. க. ஸ்டாலின் காணொளியின் மூலம் திறந்து வைக்க ஊராட்சி மன்ற தலைவர், வி. ஜெயச்சந்திரன் விழாவில் பொது மக்களின் ஒத்துழைப்புகளுடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர், மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர், தமிழச்சி தங்கபாண்டியன் , மாவட்ட ஆட்சியர், டி. சினேகா மற்றும் சோழிங்கநல்லூர்., எம்.எல்.ஏ., எஸ். அரவிந்த் ரமேஷ் , வட்டார வளர்ச்சி அலுவலர்கள் : எம் வெங்கட் ராகவன், பி .பூமகள் தேவி (கி .ஊ) அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்கிய ஆரம்ப சுகாதார நிலையம் இன்று திறக்க உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். இந்த நிகழ்வில் புனித தோமையார் மலை ஒன்றிய பெருந்தலைவர் சங்கீதா பாரதி ராஜன், செயலாளர்., கோவிலம்பாக்கம்,ஜி .

வெங்கடேசன், சித்தாலப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், எஸ்.ரவி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்,

ஜே. இ.பாண்டியன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர், ஆர். எஸ். லோகேஸ்வரா ,ஒன்றிய கழக துணை செயலாளர், எச்.டி .போஸ், ராமையா நகர் கிளைக் கழகச் செயலாளர், எஸ். சுரேஷ், மற்றும் ஊராட்சி செயலர், ஆர். டி. பார்த்திபன், அரசு அலுவலர்கள்,ஊராட்சி மக்கள் திமுக கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



## கீழக்கோட்டையில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம்

காளையார் கோவில் பிப் 08-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. பள்ளி மேலாண்மை குழுத் தலைவி நித்யா தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் தெய்வானை முன்னிலை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை மேலாண்மை குழு கூட்டத்திற்கான கூட்டப் பொருட்களான திறன் இயக்கம் எண்ணும் எழுத்தும் உயர்கல்வி வழிகாட்டி அனைத்து குழந்தைகளும் பள்ளியில் உள்ளடக்கிய கல்வி மதிப்பீடு முன்னாள் மாணவர்கள் மகிழ் முற்றம் மன்றச் செயல்பாடுகள் குறித்தும் விரிவாக விளக்கிக் கூறினார். வானவில் மன்ற செயல்பாடுகள் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு அறிவியல் கண்காட்சி நடத்துவது குறித்தும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி விளக்கி கூறினார். பள்ளி மாணவ மாணவிகள் அனைவருக்கும் தன் சொந்த செலவில் காலணிகள் மற்றும் காலுறைகள் வழங்கிய ஜப்பான் தொழிலதிபர் பிரபு அவர்களுக்கு பள்ளி மேலாண்மை குழு சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியர்கள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா பள்ளி மேலாண்மை குழு செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்தநாளை முன்னிட்டு சாத்தமங்கலம் மணிமண்டபத்தில் அவரது சிலைக்கு அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். எம்.எல்.ஏக்கள் கோ.தளபதி, மு.பூமிநாதன் மற்றும் துணை மேயர் தி.நாகராஜன் உடனிருந்தனர்.



## தேனி மாவட்ட அளவிலான கருத்தரங்கம்

தேனி பிப். 08

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் என் ஊர் என் கனவு திட்டத்தின் கீழ் தொலைநோக்கு தேனி 2030ஐ மையப்பொருளாகக் கொண்டு மாவட்டத்தின் வளர்ச்சியில் பங்களிப்பினை அளிக்கும் வகையில் தொலைநோக்கு திட்டங்களைக் கொண்ட தனிநபர்கள், மக்கள் பிரதிநிதிகள், இளம்தலைவர்கள், துறைசார்ந்த வல்லுநர்கள், உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், வணிகர்கள், சங்கப்பிரதிநிதிகள், தொண்டு நிறுவனர்கள், சமூக செயல் பாட்டாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோரிடம் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை கேட்டறிந்து இலக்கு2030 உத்திகள் மற்றும் செயல்திட்டங்கள் தயாரிப்பதற்கான மாவட்ட அளவிலான கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ் ஜீத் சிங், தலைமையில், தேனி பாராளுமன்ற உறுப்பினர். தங்க தமிழ்செல்வன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். சரவணகுமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.






■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலையத்தில் பணியாற்றிய முதல் நிலை காவலர் மானாமதுரை ரயில்வே காலனியைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் (எண்: 2305, 2013 Batch) உடல் நலக்குறைவால் காலமானார். கடந்த சில நாட்களாக உடல்நல பாதிப்பால் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.அவரது வீட்டில் காவல்துறையினர் அஞ்சலி செலுத்தி மரியாதை வழங்கினர். பின்னர், சொந்த ஊரில் 21 குண்டுகள் முழங்க போலீஸ் மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெற்றது. காவல்துறையினரும் பொதுமக்களும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தனர்.

## திமுக மாவட்ட மீனவரணி வெள்ளிக்கட்டி அன்பழகன் இல்ல மணவிழா. அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் நடத்தி வைக்கிறார்



சிவகங்கை பிப் 08-

சிவகங்கை மாவட்ட திமுக மீனவரணியின் மாவட்ட துணை அமைப்பாளராகக் கழகப்பணியாற்றி வருபவர் தேவகோட்டை வெள்ளிக்கட்டி அன்பழகன் நாகவள்ளி தம்பதியரின் மகன் சென்னை உயர்நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் முதுகலைப் பட்டதாரியான அ. கார்த்திகேயனுக்கும் , காளையார்கோவில் கள்ளிவயல் கிராமத்தைச் சேர்ந்த கோபால் சின்னநாச்சியார் ஆகாயோரது செல்வமகள் சரஸ்வதி விகாஷ் வித்யாலாயா பதின்ம மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் கோகிலாவிற்கும் , இன்று 8.2.2026 அன்று தேவகோட்டை அருகே கொங்கேஷ்வரன் கோவிலில் திருமணம் நடைபெற்று , சருகணி இதயா கல்லூரி அருகேயுள்ள விமலா திருமண மண்டபத்தில் வரவேற்பு விருந்து நடைபெறுகிறது...

தேவகோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் பூபாளசிங்கம் தலைமையேற்க மாண்புமிகு அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு நடத்தி வைக்கிறார்...

நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம் , மேனாள் அமைச்சர் தென்னவன் , சட்டமன்ற உறுப்பினர்களான எஸ். மாங்குடி , ஆ. தமிழரசி ரவிக்குமார் , காங்கிரஸ் மூத்த தலைவர் கே. ஆர். இராமசாமி அம்பலம், மாவட்ட துணைச் செயலாளர்களான சேர்மன் த.சேங்கைமாறன் , ஜோன்ஸ் ரூஸோ , சேர்மன் எஸ். மாரியப்பன் கென்னடி , மாநில விவசாய அணி துணைச் செயலாளர், காரைக்குடி தொகுதி பார்வையாளர் , இராஜசிங்கமங்கலம் மேனாள் யூனியன் சேர்மன் நல்லசேதுபதி , மாநில மாணவரணி துணைச் செயலாளர் புதுக்குறிச்சி ஜெ. இராமகிருஷ்ணன் , மாவட்ட மீனவரணி அமைப்பாளர் ஈஷ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்...

இந்த விழாவில் மாநில, மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்...

விழா ஏற்பாடுகளை மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் வெள்ளிக்கட்டி அன்பழகன், நாகவள்ளி, இந்திய இராணுவம் சஞ்சய் குடும்பத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்...




## அஸ்தினாபுரம் பேருந்து நிலையத்தில் குடியிருப்போர் இணைப்பு மைய நலச் சங்கத்தினர் பல்வேறு மக்கள் கோரிக்கைகளை வைத்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தாம்பரம் பிப் 08-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த அஸ்தினாபுரம் பேருந்து நிலையத்தில் தாம்பரம், பல்லாவரம் குடியிருப்போர் இணைப்பு மையத்தின் சார்பாக செயலாளர் முருகையன் தலைமையில் தாம்பரம் மாநகராட்சி மற்றும் மின்சாரத்துறை ஆகியவற்றை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தை குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் செய்தனர்

இதில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தாம்பரம் மாநகராட்சியில் சாலை வசதிகள், மழைநீர் கால்வாய், குப்பை அகற்றுதல், குடிநீர் வினியோகம் சரிவர செய்யவில்லை, சாலை ஆக்கிரமிப்பு, சாலை பராமரிப்பு முறையாக பின்பற்றவில்லை மற்றும் ராதா நகர் சுரங்கப்பாதை மக்கள் பயன்பாட்டிற்கு முழுமையாக கொண்டு வர வேண்டும், வைஷ்ணவ கல்லூரி சுரங்கப்பாதை திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாம்பரம் மாநகராட்சி, ரயில்வே துறை, மின்சாரத்துறை நெடுஞ்சாலை துறை ஆகியவற்றை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அனைத்து மக்கள் பிரச்சனைகளையும் உடனடியாக செய்து தர வேண்டும் என கோரிக்கைகளை முன்வைத்து கண்டன கோஷங்களை எழுப்பினர்

## திருப்பத்தூர் கிறிஸ்துராஜா பள்ளியில் அறிவியல் துளிர் இல்லங்கள் துவக்க விழா



திருப்பத்தூர் பிப் 08-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோளாகிய மாணவர்களிடத்தில் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் நோக்கத்தில் திருப்பத்தூர் கிறிஸ்துராஜா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் துளிர் இல்லங்கள் துவக்கப் பட்டன. அப்துல் கலாம் அறிவியல் துளிர் இல்லத்தின் தலைவராக எட்டாம் வகுப்பு மாணவர் முகேஷ் செயலாளராக ஏழாம் வகுப்பு மாணவர் பரணீத் மற்றும் பொருளாளராக ஆறாம் வகுப்பு மாணவர் யாஷ்வந்த் ஆகியோர் பதவியில் அமர்த்தப்பட்டனர். ஐன்ஸ்டீன் அறிவியல் துளிர் இல்லத் தலைவராக எட்டாம் வகுப்பு மாணவர் கார்த்திகாஶ்ரீ செயலாளராக ஏழாம் வகுப்பு மாணவர் பெர்னிஸ் ஜூனியா மற்றும் பொருளாளராக ஆறாம் வகுப்பு மாணவர் மொகிதாஶ்ரீ ஆகியோர் பதவியில் அமர்த்தப் பட்டனர்.

முன்னதாக ஐன்ஸ்டீன் அறிவியல் இல்லத் தலைவர் கார்த்திகாஶ்ரீ அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பள்ளித் தலைவர் விக்டர் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி அறிவியல் துளிர் இல்லங்கள் துவங்கப்படுவதன் காரணங்களை விளக்கி அறிமுக உரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தனது தலைமை உரையில் மாணவப் பருவத்தில் இருந்தே மாணவர்கள் எந்த ஒரு நிகழ்வையும் செயலையும் அறிவியல் மனப்பான்மையுடன் சிந்தித்து செயல்படும் அறிவியல் பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார். மாவட்டச் செயலாளர் பிரபு அறிவியல் துளிர் இல்லப் பொறுப்பாளர்களாகிய தலைவர் செயலாளர் பொருளாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் பற்றி எடுத்துரைத்து அவர்களைப் பதவியில் அமர்த்தினார். மாவட்டப் பொருளாளர் சாஸ்தா சுந்தரம் முன்னாள் மாநிலப் பொருளாளர் ஜீவானந்தம் மற்றும் முன்னாள் கிளைச் செயலாளர் சேகர் ஆகியோர் எந்த ஒரு செயலிலும் அறிவியல் அணுகுமுறை இருக்க வேண்டும் என்று எடுத்துரைத்து அறிவியல் எழுச்சியுரையாற்றினர். அப்துல் கலாம் துளிர் இல்லத் தலைவர் முகேஷ் நன்றி கூறினார். மாணவ மாணவிகள் திரளாக கலந்துகொண்டனர்.



## திமுக வாக்குறுதிகள் தோல்வி: ஆட்சி மாற்றத்திற்கு தயாரான மக்கள் – ஜி.கே. வாசன்

மதுரை, பிப் 8-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தேசிய ஜனநாயக கூட்டணியின் (ழிஞிகி) முக்கிய அங்கமாக செயல்படும் தமிழ் மாநில காங்கிரஸ் (த.மா.கா) கட்சியின் தென் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மதுரை அழகர்கோவில் சாலையில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கட்சித் தலைவர் ஜி.கே. வாசன், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பும் தொண்டர்களுக்கு விருப்பமனுக்களை வழங்கி, அவர்களிடமிருந்து மனுக்களை பெற்றார்.

முன்னதாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஜி.கே. வாசன், "தேர்தலுக்கான அடித்தள பணிகள் துவங்கியுள்ளன. கோவையில் 14ஆம் தேதி, சென்னையில் 17ஆம் தேதி, திருச்சியில் 19ஆம் தேதி ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற உள்ளன. வெற்றி கூட்டணியாக மக்கள் நம்பிக்கையைப் பெறும் வகையில் தேர்தல் பணிகளை மேற்கொள்வோம்" என தெரிவித்தார். போட்டியிட விரும்புவோர் 25ஆம் தேதிக்குள் சென்னை தலைமை அலுவலகத்தில் விருப்ப வேட்பாளர் மனுவை ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறினார்.

மேலும், "தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்திற்கு தயாராக உள்ளனர். திமுக அரசு அளித்த வாக்குறுதிகளில் 70 சதவீதம் நிறைவேற்றப்படவில்லை. ஆட்சி முடிவடையும் காலத்தில் புதிய திட்ட அறிவிப்புகள் மக்களை ஏமாற்றும் செயல்" என விமர்சித்தார். மின்கட்டண உயர்வு, குற்றச் சம்பவங்கள் அதிகரிப்பு உள்ளிட்டவை குறித்தும் அவர் குற்றம்சாட்டினார்.

விஜயின் கட்சி தொடர்பான வாக்கு சதவீதம் குறித்து பேசுகையில், "அதனை மக்கள் தான் அதிகாரபூர்வமாக உறுதி செய்வார்கள்" என்றார். கூட்டணி குறித்து அதிகாரப்பூர்வ தகவல் இல்லை என்றும், "ழிஞிகி தலைமை என்பது மத்தியில் பிரதமர் மோடி தலைமையிலான கூட்டணி" என்றும் அவர் விளக்கினார். பாராளுமன்ற மரபுகளை மீறுபவர்களை பேச அனுமதிக்கக் கூடாது; இதில் கட்சி பாகுபாடு இல்லை என்றும் ஜி.கே. வாசன் தெரிவித்தார். நிகழ்ச்சியில் உன்னால் எம்எல்ஏக்கள் சித்தன் உடையப்பன், எஸ் கே ராஜேந்திரன், மாவட்டத் தலைவர்கள்

ராஜாங்கம், நடராஜன், மாநிலச் செயலாளர்கள் மைதீன் பாட்ஷா, பைரவமுர்த்தி,மணி,மாநில இணைச் செயலாளர்கள் பிரேம்குமார், சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## தேசிய நெடுஞ்சாலையில் உயிரைப் பறிக்கும் அபாயம்

திருத்தணி, பிப்.8-

திருத்தணி அருகே அலட்சியமாக நடக்கும் சாலைப் பணிகள்!திருத்தணி:திருத்தணி அருகே திருப்பதி சென்னை தேசிய நெடுஞ்சாலையில், வாகனப் போக்குவரத்து அதிகமுள்ள நேரத்தில் முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றி நடைபெற்று வரும் சாலைப் பணிகள் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அலட்சியத்தின் உச்சம்திருப்பதி சென்னை தேசிய நெடுஞ்சாலை எப்போதும் வாகனங்கள் சீறிப்பாயும் ஒரு முக்கியமான வழித்தடமாகும். தற்போது இந்தப் பாதையில் பெரிய பள்ளங்கள் தோண்டப்பட்டு பொக்லைன் இயந்திரங்கள் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், இந்தப் பணிகள் நடைபெறும் இடத்தில் வாகனங்கள் விழுந்துவிடாதவாறு போதுமான தடுப்புகளோ அல்லது எச்சரிக்கை பலகைகளோ முறையாக வைக்கப்படவில்லை.சரிந்து விழும் அபாயம்

குறிப்பாக, சாலையின் ஓரத்தில் மிக ஆழமாகப் பள்ளம் தோண்டப்பட்டுள்ள நிலையில், அதன் மிக அருகிலேயே பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் சென்று வருகின்றன. வாகனங்கள் செல்லும் அதிர்வால் இந்தப் பள்ளம் சரிந்து விழும் நிலையில் உள்ளது. ஒருவேளை வாகனங்கள் செல்லும்போதே மண் சரிவு ஏற்பட்டால், மிகப்பெரிய உயிர்ச்சேதம் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.



## திமுக சார்பில் நெடுங்கல் அரசு மேல்நிலைப் பள்ளியில் 107 மாணவ–மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கல்

கிருஷ்ணகிரி, பிப் 08-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம் நெடுங்கல் ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில், தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ. அவர்கள் கலந்துகொண்டு, பள்ளியில் பயிலும் 107 மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், திமுக பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், நாகோஜன அள்ளி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, பள்ளியின் தலைமையாசிரியர் காளியப்பன், பெற்றோர்ஶ்ரீ ஆசிரியர் கழகத் தலைவர் சிவபிரகாசம், பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் இந்திராணி உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் பள்ளி மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், திமுக மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

மாணவர்களின் கல்வி பயணத்தை எளிதாக்கும் நோக்கில் தமிழக அரசு செயல்படுத்தி வரும் விலையில்லா மிதிவண்டி திட்டம், கிராமப்புற மாணவஶ்ரீமாணவிகளின் கல்வி முன்னேற்றத்திற்கு பெரிதும் துணைபுரிகிறது என நிகழ்ச்சியில் பேசிய தலைவர்கள் தெரிவித்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மூக்கண்டப்பள்ளி ஹோட்டல் ஹில்ஸ் கூட்டரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய மாவட்ட மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தி பொருட்களுக்கான வணிக சந்திப்பை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் துவக்கி வைத்து உற்பத்தி பொருட்கள் கண்காட்சியை பார்வையிட்டார். உடன் ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் பெரியசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## உழைக்கும் தொண்டர்களை மதிக்கும் இயக்கம் அ.தி.மு.க. – கே.பி.முனுசாமி பேச்சு



கிருஷ்ணகிரி, பிப்.8-

உழைக்கும் தொண்டர்களுக்கு மரியாதை அளிக்கும் சுயமரியாதை இயக்கம் அ.தி.மு.க. என கிருஷ்ணகிரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி பேசினார்.

கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் அருகில், அண்ணா சிலை எதிரில் நேற்று மாலை பல்வேறு மாற்றுக் கட்சியினர் அ.தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திமுக, தவெக உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த 1,500க்கும் மேற்பட்டோர் தங்கள் கட்சிகளில் இருந்து விலகி, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க.வில் இணைந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய கே.பி.முனுசாமி,

"அ.தி.மு.க. என்பது சுயமரியாதை உள்ள இயக்கம். இந்த இயக்கத்தில் உழைப்பவர்களுக்கு உரிய மதிப்பு வழங்கப்படுகிறது. அதனால்தான் பிற கட்சிகளில் இருந்து விலகி இன்று ஏராளமானோர் அ.தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். அ.தி.மு.க.வில் வாரிசு அரசியல் கிடையாது. உழைப்பும் தியாகமும் தான் முன்னேற்றத்திற்கு அடிப்படை" என்றார்.

மேலும், கிருஷ்ணகிரி நகரில் உள்ள 66 வாக்குச்சாவடிகளில் அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி இந்த இணைப்பின் மூலம் மேலும் வலுப்பெறும் என்றும், கூடுதலாக 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் அ.தி.மு.க.வுக்கு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதிகளை நினைவூட்டிய அவர்,

குலவிளக்கு திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதம் ரூ.2 ஆயிரம் உதவி, டவுன் பஸ்களில் ஆண்களுக்கும் கட்டணமில்லா பயணம், ஊரக வேலை உறுதி திட்டத்தில் 150 நாட்கள் வேலை வழங்கப்படும் என கூறினார்.

மேலும், 5 லட்சம் பெண்களுக்கு ஸ்கூட்டி வாங்க ரூ.25 ஆயிரம் மானியம், இல்லத்தரசிகளுக்கு ஆண்டுக்கு 3 சிலிண்டர்கள் இலவசம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாணவர்களின் கல்விக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் எனவும் தெரிவித்தார். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் இந்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும் என உறுதியளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் அசோக்குமார், மாநில மகளிர் அணி துணை செயலாளர் பரிதா நவாப், மாவட்ட அவை தலைவர் காத்தவராயன், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் தமிழ் செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சிவி ராஜேந்திரன், மனோரஞ்சிதம் நாகராஜ், முனி வெங்கட்டப்பன்,

இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே பி எம் சதீஷ்குமார், அதிமுக பிரமுகர் எஸ்.கே.நவாப்,

மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன், மாவட்ட தொழிலாளர் அணி ஆஜி, மாவட்ட சிறுபான்மை பிரிவு மக்பூல், மாவட்ட இளைஞரணி கார்த்தி, மாவட்ட விவசாய அணி மோகன், மாவட்ட மாணவரணி ராகுல், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு ஜெயக்குமார், ஒன்றிய செயலாளர்கள் கன்னியப்பன், பையூர் ரவி, ரவிச்சந்திரன், சூர்யா, முன்னாள் மாவட்ட செயலாளர் தென்னரசு, மாவட்ட அம்மா பேரவை தலைவர் தங்கமுத்து, காவேரிப்பட்டினம் நகர செயலாளர் விமல், பர்கூர் ஜெயபால், அதிமுக பிரமுகர் சுஹேல், மாவட்ட மகளிர் அணி சுகந்தி மாது, மாவட்ட துணை செயலாளர் சாகுல் அமீது, நகர துணை செயலாளர் குரு, முன்னாள் நகர இளைஞர் அணி செயலாளர் சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள்மற்றும் கட்சித் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, ஆர்.வி.அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், லயன் டேட்ஸ் நிறுவன சமூக பொறுப்பு நிதியின் கீழ் 29,720 அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு ரூ. 65 இலட்சம் மதிப்பில் ஊட்ட சத்து மிக்க லயன் டேட்ஸ் தொகுப்பை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் வழங்கினார். உடன் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, ஓசூர் கல்வி மாவட்ட அலுவலர் ரமாதேவி, பள்ளி தலைமையாசிரியர் வளர்மதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ. மனோகரன், லயன் டேட்ஸ் நிறுவன மேலாளர் முத்துராஜ் ஆகியோர் உள்ளனர்.



# பழைய பேருந்தின் கண்ணாடி தானாக உடைந்து விபத்து: பயணிகள் காயம் புதிய பேருந்து இயக்க பொதுமக்கள் கோரிக்கை

திருவள்ளூர், பிப்.8-

சென்னையிலிருந்து திருத்தணி நோக்கிச் சென்று கொண்டிருந்த தடம் எண் 97 அரசுப் பேருந்தின் முன்பக்க கண்ணாடி திடீரென தானாக உடைந்து விழுந்ததில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த விபத்தில் ஓட்டுநர் மற்றும் பேருந்தின் முன்பகுதியில் அமர்ந்திருந்த பயணிகள் சிலருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தின் விவரம்:

வழக்கம் போல் பயணிகள்1 கூட்டத்துடன் சென்னையில் இருந்து திருத்தணி நோக்கி இப்பேருந்து வந்து கொண்டிருந்தது. அருங்குளம் சந்திப்பு பகுதியைக் கடக்கும் போது, எதிர்பாராத விதமாக பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி பயங்கர சத்தத்துடன் தானாகவே வெடித்துச் சிதறியது. இதில் கண்ணாடித்துண்டுகள் பட்டு ஓட்டுநர் மற்றும் பயணிகள் காயமடைந்தனர். உடனடியாக பேருந்து நிறுத்தப்பட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

பெருகும் கோரிக்கைகள்:

இச்சம்பவம் குறித்து அப்பகுதி பொதுமக்களும் பயணிகளும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இது குறித்து அவர்கள் கூறுகையில்:


இந்த வழித்தடத்தில் இயக்கப்படும் பெரும்பாலான அரசுப் பேருந்துகள் மிகவும் பழையதாகவும், முறையான பராமரிப்பு இல்லாமலும் உள்ளன.

பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாமல் இது போன்ற சேதமடைந்த பேருந்துகளை இயக்குவது கண்டிக்கத்தக்கது.

எனவே, அரசு உடனடியாக தலையிட்டு, இந்தத் தடம் எண் 97ல் இயக்கப்படும் பழைய பேருந்துகளை அப்புறப்படுத்திவிட்டு, புதிய மற்றும் தரமான பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு நிர்வாகம் இக்கோரிக்கையை விரைந்து பரிசீலித்து, பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என அனைவரும் வலியுறுத்தி வருகின்றனர்.

# விமானங்களின் தரப் பரிசோதனை: 754ல் கோளாறானவை 377 மத்திய அரசு தகவல்



புதுடெல்லி, பிப்.8-

கடந்த ஆண்டு ஜனவரி முதல் இந்தாண்டு பிப்.3ம் தேதி வரை பரிசோதிக்கப்பட்ட 754 விமானங்களில், 377 விமானங்களில் கோளாறுகள் இருந்தன என்ற அதிர்ச்சி தகவலை மக்களவையில் மத்திய விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் முரளிதர் மோஹோல் தெரிவித்தார்.

விமானங்கள் பரிசோதனை தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய இணையமைச்சர் முரளிதர் மோஹோல் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் கூறியதாவது: கடந்த மூன்று ஆண்டுகளில் விமானங்களில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இது போன்ற 353 சம்பவங்கள் நிகழ்ந்தன. 2024ம் ஆண்டு மொத்தம் 421 தொழில்நுட்பக் கோளாறுகள் பதிவாகியுள்ளன, இது முந்தைய ஆண்டின் 448 ஐ விடக் குறைவு.

அனைத்து விமானங்கள் மற்றும் விமான நிலைய இயக்குநர்களுக்கான விதிமுறைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் தேவைகளுக்கு இணங்குவதைக் கண்காணிக்க, விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறை அமைப்பான சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) ஒரு முறையான பாதுகாப்பு மேற்பார்வை முறையைக் கொண்டுள்ளது. இதில் கண்காணிப்பு, திடீர் சோதனைகள் மற்றும் ஒழுங்குமுறை தணிக்கைகள் ஆகியவை அடங்கும்.

ஏதேனும் மீறல்கள் அல்லது விதிமுறைகளுக்கு மாறானது எனக் கண்டறியப்பட்டால், டிஜிசிஏவால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது தொடர்பாக டிஜிசிஏ ஒரு சுற்றறிக்கையையும் வெளியிட்டுள்ளது. விமானங்களின் அனைத்துவகைக் குறைப்பாடுகளையும் டிஜிசிஏவிற்குத் தெரிவிக்குமாறு விமான நிறுவனங்களுக்கு அது அறிவுறுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள தனியார் விமான நிறுவனங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தம் முழு விமானங்களையும் அவ்வப்போது ஆய்வு செய்கின்றன. இதில், பல்வேறு வகையான உபகரணங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன.

இந்த உபகரணங்களின் முன்னுரிமை அல்லது அவசரநிலையின் அடிப்படையில் இவை ஏ, பி, சி மற்றும் டி என நான்கு வகை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு ஆய்வு செய்த அதே காலகட்டத்தில் டிஜிசிஏவும் அனைத்து நிறுவனங்களின் விமானங்கள் மீது 3,890 கண்காணிப்பு ஆய்வுகளை நடத்தியுள்ளது.

# தாம்பரத்தில் மணிதநேய மக்கள் கட்சியின் 18ஆம் ஆண்டு துவக்க விழா முன்னிட்டு மாநில துனைப் பொதுசெயலாளர் தாம்பரம் யாக்கூப் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி ஏழை, எளிய மக்கள் 500 பேருக்கு அன்னதானம் வழங்கினர்





தாம்பரம் பிப் 08-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் மணிதநேய மக்கள் கட்சியின் 18ஆம் ஆண்டு துவக்க விழா முன்னிட்டு வடக்கு மாவட்டம் சார்பில் தாம்பரம் ரங்கநாதபுரம் சுகாதர மையம் அருகே மணிதநேய மக்கள் கட்சியின் மாநில துனைப்பொதுசெயலாளரும், மாமன்ற உறுப்பினருமான தாம்பரம் யாக்கூப் கலந்து கொண்டு கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இதனை தொடர்ந்து சண்முகம் பிரதான சாலையில் அன்னதான நிகழ்ச்சியில் பேரிடர் காலங்களில் மணிதநேய மக்கள் கட்சியின் பணிகள் குறித்து சிறப்புரையாற்றி ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். இதில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் ஜாஹிர் உசேன் மற்றும் மாநில அணி, மாவட்ட அணி, வார்டு நிர்வாகிகள் உட்பட ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்தமாநில துனைப் பொதுசெயலாளர் தாம்பரம் யாக்கூப் பேசுகையில் தேர்தல் அரசியலுக்கு மல்லமல்லாமல் சேவை நோக்கத்துடன் இந்த கட்சி துவங்கபட்டது எனவும் பேரிடர் காலங்களான வர்தா புயல், வெள்ளபெருக்கு காலங்களில் பல்வேறு கட்ட உதவிகளை செய்து வருகிறது, பேராசிரியர் அனைத்து சமூக மக்களுகாக சட்டமன்றத்தில் பல்வேறு கோரிக்கைகளை வகிறுத்தியுள்ளார் மணிதநேய மக்கள் கட்சி மாமன்றத்திலும், சட்டமன்றத்திலும் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம் ஆனால் லட்சக்கணக்கான மக்களி மனதில் இடம்பிடித்த ஒரு கட்சி எனவும் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் 5 இடங்களை வழங்க வேண்டும் என கேட்டுகொண்டுள்ளார், மணிதநேய மக்கள் கட்சிக்கு மக்கள் கட்சிக்கு இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள் என அனைத்து சமூகத்தினதின் ஆதரவு இருந்த நிலையதெரிவித்தார்.எந்த தொகுதியாக இருந்தாலும் ஏன் தாம்பரம் தொகுதியாக இருந்தாலும் மணிதநேய மக்கள் கட்சி ஏற்று கொள்ளும் என தெரிவித்தார்.



# மகாராஷ்டிராவின் வறட்சி – தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி:சோலாப்பூரிலிருந்து ஓமலூருக்கு இடம்பெயரும் கூலித் தொழிலாளர்கள்

கிருஷ்ணகிரி, பிப் 08-

மகாராஷ்டிரா சோலாப்பூரிலிருந்து கிருஷ்ணகிரி வழியாக ஓமலூருக்கு இடம்பெயரும் கூலித் தொழிலாளர்கள்

மகாராஷ்டிரா மாநிலம் சோலாப்பூர் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக நிலவி வரும் கடுமையான வறட்சி, விவசாயத் தோல்வி மற்றும் வேலைவாய்ப்பு பற்றாக்குறை காரணமாக, அப்பகுதியைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட கூலித் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தைத் தேடி தமிழ்நாடு சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளனர்.

இந்த தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களுடன் டிராக்டர்கள் மூலம் நீண்ட தூரம் பயணம் செய்து, ஓமலூரில் இயங்கி வரும் பல தனியார் தொழிற்சாலைகளில் கூலி வேலை செய்வதற்காக வந்துள்ளதாக தெரிவித்தனர். தங்கள் சொந்த பகுதிகளில் போதிய மழையில்லாமல் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டதால், தினசரி வாழ்க்கை நடத்துவதற்கே கடும் சிரமம் ஏற்பட்டதாகவும், அதனால் வேறு மாநிலத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

தமிழ்நாடு குறிப்பாக சேலம் மாவட்டம் தொழில்துறை வளர்ச்சியுடன் கூடிய பகுதியாக இருப்பதால், இங்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதாகவும், கூலி தொகையும் தங்களின் சொந்த மாநிலத்தை விட சற்றே மேம்பட்டதாக இருப்பதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர். இதனால் குடும்ப செலவுகளை சமாளிக்கவும், குழந்தைகளின் கல்விக்காகவும் இங்கு வேலை செய்வது உதவிகரமாக இருப்பதாக கூறினர்.

மேலும், தமிழக மக்கள் மற்றும் உள்ளூர் நிர்வாகம் தங்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் அளிப்பதில்லை என்றும், அமைதியான சூழலில் பணிபுரிய முடிவதாகவும் தெரிவித்த தொழிலாளர்கள், வேலை மற்றும் தங்குமிட வசதிகள் கிடைப்பதே தங்களின் தற்போதைய முக்கிய தேவையாக இருப்பதாகவும் கூறினர்.

இந்த இடம்பெயர்வு, ஒருபுறம் மகாராஷ்டிராவில் நிலவும் வறட்சி நிலையை வெளிப்படுத்துவதுடன், மறுபுறம் தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளையும் பிரதிபலிப்பதாக சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் . கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருவதையொட்டி அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ள இடத்தினை தேர்வு செய்வது தொடர்பாக பால்வளத்துறை அமைச்சர் .த. மனோதங்கராஜ். நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் ஆய்வினை மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சி தலைவர், மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள்,தி மு க நிர்வாகிகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டணம் பகுதியில்நாளை மின் நிறுத்தம்

கிருஷ்ணகிரி,பிப் 08-,

கிருஷ்ணகிரி மின் வாரிய செயற்பொறியாளர் பவுன்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- பெண்ணேஸ்வரமடம் துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நாளை (திங்கட்கிழமை) நடக்கிறது. எனவே நாளை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 09.02.2026 (திங்கட்கிழமை) அன்று 110/3311 கி.வோ பெண்ணேஸ்வரமடம் துணைமின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதால் இங்கிருந்துமின் வினியோகம் செய்யும், நகர் காவேரிப் பட்டிணம், தளிஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், சவுளூர், சந்தாபுரம், நரிமேடு,எ ர்ரஅள்ளி,போத்தாபுரம், பையூர், தேவர்முக்குளம், பெரியண்ணன் கொட்டாய், தேர்பட்டி,பாலனூர், நெடுங்கல், ஜெகத ாப்,வீட்டுவசதிவாரியம், பாளையம், மில்மேடு, இந்திரா நகர்,குண்டலபட்டி, கத்தேரி,கருகன்சாவடி,மேல்மக்கான், தாலாம்டுவு,பனகமுட்லு, தளியூர், மோரனஅள்ளி,தொட்டிப்பள்ளம்,சாப்பர்த்திகொத்தலம் ,குண்டாங்காடு, போடர அள் ளி,குட்டிவேடிச்சம்பட்டி, மலையாண்டஹள்ளி மற்றும் அதை சுற்றி உள்ள கிராமங்களில் மின்சாரம் இருக்காது. இவ் வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முருக்கம்பள்ளம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக்கடை திறப்புமதியழகன் எம்.எல்.ஏ. குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்



கிருஷ்ணகிரி, பிப் 08-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பர்கூர் வடக்கு ஒன்றியம், பாலேப்பள்ளி ஊராட்சி, முருக்கம்பள்ளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பகுதி நேர நியாய விலைக்கடை திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு, குத்துவிளக்கேற்றி நியாய விலைக்கடையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்த நியாய விலைக்கடை திறக்கப்பட்டதன் மூலம், முருக்கம்பள்ளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் எளிதாகவும், நேரடியாகவும் கிடைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். நீண்ட தூரம் சென்று பொருட்கள் வாங்க வேண்டிய சிரமம் இனி இல்லாததாகவும், இது ஏழை எளிய மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் திட்டமாக இருப்பதாகவும் நிகழ்வில் பேசப்பட்டது.

இந்த விழாவில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஏசி நாகராஜ், ஒன்றிய செயலாளர் வி.ஜி. ராஜேந்திரன், அறிஞர் ரவி உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி இறுதியில், நியாய விலைக்கடை திறப்பிற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டு, பொதுமக்களின் நலனுக்கான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவோம் என உறுதி தெரிவிக்கப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161